# 15. திருவாவினன்குடி.



*எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.*

*பண் - பழம்பஞ்சுரம்.*

**அ**ண்டர் யாவரு மறியொ ணாப்பொரு
ளாதி யந்தரந் தெரியொ ணாப்பொருள்
பண்டை நூலெலாம் பகரொ ணாப்பொருள்
பார மார்த்திக ஞான வான்பொருள்

9. ***அரி*** = *சிலம்பு, "அரிதளைநெகிழ்" என்பது* ***பிங்கலந்தை.***

எண்ட கைப்பொரு ளாகு நீதடி
யேந்து கின்றசன் னாசி போன்றதென்
தொண்ட னேனையிங் காண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 1

(திரு) ஆவினன்குடியென்பது பழநிமலை யடிவாரத்தலம். அதிலிருக்கும் **ஸ்ரீசுப்பிரமணியத்தை** நோக்கிப் பாடியுள்ள இத்திருப்பதிகத்தில் என்னாண்டவனாகிய நீ மலை மீது தண்டபாணியாகத் தனி நிற்குங் காரணம் யாதென ஆக்கியோர் வினவிய பொருள் காணப்படுதலின், இங்ஙனம் அடிகள் அவ்விரண்டு மூர்த்திகளையு மிணைத்துத் துதித்தனரென வறிக.

**நே**ரி லாவுய ராக்க வெள்வரை
நிலய முட்சிவ கணங்க ளேத்திடப்
பீரி லாக்கொலு விருந்து நின்பதம்
பெறவ ருந்திரு வடிய வர்க்கருள்
சூரி லாச்சைவ தெய்வ நீயொரு
துறவி போற்றனி நிற்ப தென்னதி
தூர மின்றெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 2

**ப**ரிதி பல்லொளி சுடர்கி ரீடமும்
பதும பாதவம் பரிபு ரங்களும்
மிருது மல்கெழின் மடியு டுக்கையு
மிறையி லொண்செவி யணிக ளுந்தன
தருகி னல்லிரு தேவி யும்மிலா
தாண்டி வேடம தான தென்னதி
துரித மாவெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 3

**அ**டல்கொள் பூதரும் வீர வாகுவொ
டமரும் வீரரு மோரி லக்கரும்
புடைசெ றிந்திடச் சரண மஞ்ஞையிற்
பொருவி லாதெழு தருப ராபரம்

3. ***மிறை*** = *குற்றம் ;* ***நிகண்டுகள்*** *காண்க.*

தடவி சும்புயர் வரையி லேயொரு
தனிமை யாநனி நிற்ப தென்னுனைத்
தொடரு மென்றனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 4

**உ**லகி லேயுனைப் பாடுந் தொண்டுள
ருய்ய வோதவ ருய்ய வோமனச்
சலமில் யோகிக ளுய்ய வோநிகழ்
சருவ சீவருந் தவத்தி னுய்யவோ
தலையிற் பின்சிகை யரையிற் கோவணந்
தண்ட மங்கையிற் கொண்டு நின்றுளை
தொலைவி டாதெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 5

**பொ**ய்யு ளேனுயிர்க் கொலையு ளேன்பெரும்
புலையு ளேனெடுங் களவு ளேனிதம்
மையி டுங்கணி மயலு ளேன்மட
மருளு ளேன்பட ரிருளு ளேனிங்ன்
உய்யு மாறருள் கூர்ந்து வந்தென்மு
னோது நின்னொர்த யாள மென்சொலத்
துய்ய னேயெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 6

**செ**ப்பொ ணாதவைம் பாச சாகரச்
செதும்பு ளேகிடந் தழுங்கி நன்னெறி
ஒப்பு றாவிழி நாய னேனிங
னுய்வ னோதிரு வருளி லாது மெய்
அப்ப னீயென மைந்த னானென
வாமொர் தொன்முறை காட்டி னாயிவண்
துப்ப னாயெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 7

---

7. ***செதும்பு*** = *சேறு.*

**க**ழுதை யிற்கடை யாய நானுனைக்
கருத நன்னெறி கழறி னாய்நொடிப்
பொழுது நின்மறந் திருப்ப னோவினிப்
புகழ்சொ லாமொழி படிப்ப னோவுனை
முழுது மென்னக மாக்கி டாதினு
முளைப்ப னோமணிற் பதத்தை யல்லது
தொழுவ னோவெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 8

**மா**க நின்றுளை தீயி னின்றுளை
வளியி னின்றுளை மழையி னின்றுளை
போக நந்திரும் புவியி னின்றுளை
புகரின் மாமதி யிரவி நின்றுளை
ஆக நின்றிடு முயிரி னின்றுளை
யடிய னேனய லாவ தெங்ஙனம்
சோகம் வென்றெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 9

**கு**லமி லாதவன் றலமி லாதவன்
கோளி லாதவ னாளி லாதவன்
மலமி லாதவ னாகு நீநெடு
மலையி லேறிய மார்க்க மென்கொலொர்
சலமி லாப்புகழ் பாடி னோனகந்
தாண்ட வம்புரிந் தாண்ட தேவெனைச்
சுலப மாகவிங் காண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 10

நந்தன வருடம் பங்குனி மாதம் 30ஆம் தேதி சோமவாரம்.